13-4-47

13—4—47 விலை 4 அணா.



# The Swadesamitran ILLUSTRATED WEEKLY






குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்யத்தைத் தரும்.

**WOODWARD'S GRIPE WATER**

**W. WOODWARD LTD. LONDON. ENGLAND**

க்ரைப் வாட்டர் இப்பொழுது மருந்து சாமான்கள் கட்டுப்பாடு அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கிறது.
உபயோகிப்பவரின் விலை பாட்டில் விலை ரூ. 2—2—0.



தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி.)

**சந்தனாதித் தைலம் — அரைக்கீரை விதைத் தைலம்**

**கோகுல் கூந்தல் தைலம்**

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

**வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்**

**பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு**

**முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.**

சோல் ஏஜெண்டுகள்:—

**புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,**
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

**B. Balapattabi Chettiyar,**
246, Vysyal St.,
COIMBATORE.

# புதிய சாஸ்திரீக முறை



உங்களுக்கு இளமையின் தெம்பும் ஜீவ சக்தியும் குன்றியுள்ளதா? உடனே **டாக்டர் ஏ. ஜி. வால்** அவர்களிடம் ஆலோசனை பெறுங்கள். ஆண், பெண் இருபாலரின் தீராத நோய்களையும் எளிதில் தீர்க்கும் நிபுணர். அவரது விடா முயற்சியுடன் கூடிய ஆராய்ச்சியின் பயனாக அனுசரித்து வரும் 'புதிய சாஸ்திரீக முறை" உங்களைப் புதிய மனிதராக்கும். உடனே கீழ்க்கண்ட விலாசத்தில் அவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

## பம்பாய் ஆஸ்பத்திரி,

**1-71, பிராட்வே, ஜி. டி. மதராஸ்.**

ஆலோசனை நேரம்:

காலை 9-மணி முதல் பகல் 12-மணி வரை. மாலை 4-மணி முதல் 7-மணி வரை. ஞாயிறு காலை 9-மணி முதல் 12-மணி வரைமட்டும். பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.




சாஸ்வதமான யௌவனத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கி, புதிய இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், இல்லற இன்பத்தில் நீண்ட போக சக்தியையும் தரும். 40-நாள் மருந்து ரூபாய் 3-12-0 வி.பி. செலவு வேறு.

**ஜமதக்னி ஔஷதாலயா,**
26, வடக்கு மாடவீதி
மயிலாப்பூர் :: சென்னை.

## சிறந்த கூந்தல் உணவு!

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானது போல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.



### காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி, கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில், ஆரோக்கியமாக வளரவும் உதவுகின்றது. பொடுகைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

### ஆட்டோ டிஸ்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., 185, Jumma Musjid P. O. Box 2085, Bombay 2.



**மாதவிடாய்** நின்று விட்டதா? எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சுலபமாகவும் ஹானியின்றியும் 24-மணியில் வெளிப்படுத்தும். "சம்பஜிரேசனி" உத்தரவாதமானது. 30 வருஷம் புகழ்பெற்றது. கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட். விலை ரூ. 2—12—0 தபாற் செலவு அணா 12.

**கர்ப்பத்தடை** நீங்கள் விரும்பிய விதம் கர்ப்பத்தடை செய்ய "தம்பதி சாகா" சிறந்த மருந்து. ஹானியற்றது. நிரந்தரம் ரூ. 4—4—0 தாற்காலிகம் ரூ. 1—8—0 தபாற் செலவு அணா 12 தனி.

**ஆண்மை** "மதன் விலாஸ் ரஸாயன்" அற்புத மருந்து வீர்யமின்மை நரம்புத் தளர்ச்சி, பசியின்மை கீல் வாயு, இருமல் முதலியவை ஒரே வாரத்தில் குணமாகும். வாழ்க்கையை நன்கு அனுபவிக்கலாம். ரூ. 2—8—0 தபாற் செலவு அணா 12.

**Kaviraj M. Kavyatirtha ( S. W )**
70, Cornwallis Street, Calcutta 6.
Stockist: Milton & Miller, 157, Broadway, Madras.



பொன் விழா வருமபோது



பண்டிட் டி. கோபாலாசார்லுவின்
ஜீவாம்ருதம்

நாட்டில் தேக சுகத்தையும், சுபீட்சத்தையும் பரவச் செய்வதில் தொடர்ந்து ஐம்பது வருஷங்களாக நிலையான ஊழியம் புரிந்து வந்திருப்பதில் பெருமையடைகின்றோம்.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.
தி. நகர், மதராஸ்.

EASTERNS 379.





## அயோடிசால்

(ரத்த சுத்தி திராவகம்):

தேகத்தில் உஷ்ணம் அதிகமாகி அதனால் ஏற்படக்கூடிய வெள்ளை, வெட்டை, மேஹ முடக்கு சூலைகள், வாத மேகரோகங்கள், படை, சொறி முதலியவைகளைக் குணப்படுத்தி தேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பதுடன் ரத்த விருத்தியை உண்டாக்கும்.

பாட்டில் 1-க்கு விலை ரூ. 2.

## CIBOL: சைபால்

படர்தாமரை, சொறி, சிரங்கு, சேற்றுப்புண், வெட்டுப் புண், நமைச்சல் முதலிய சரும வியாதிகட்கு சிறந்தது.

டின் 1-க்கு விலை 0-6-0

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.
ஏஜெண்டுகள்:—
சென்னை நகர் & ஆந்திரா:
மெஸர்ஸ். ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், பி. டி., மதராஸ்.
தயாரிப்பவர்கள்:—
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை.



வசந்தத்தின் வசீகரம்
நீரோடையின் குளுகுளுப்பு
மலர்களின் நறுமணம்
தென்றலின் மிருதுதன்மை
ஸ்வர்க்கத்தின் இன்பம்

இவைகளைத் தருவது

?

அமர்ஜோதி

★

விவரங்களுக்கு:
ஆஷா கம்பெனி
சௌகார்பேட்டை,
சென்னை 1.



### ரூ. 100 இனாம்

ஆச்சரியகரமான சக்தி வாய்ந்த சித்த யந்திரம் (Govt. Regd.)

சக்தி வாய்ந்தது. "குப்த வசீகரண யந்திரத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனால் (ஆண் பெண்) நீர் விரும்பும் எவராயினும் உனக்கு அடங்கி வருவர். அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாம். செம்பு ரூ. 2-8-0. வெள்ளி ரூ 3-0-0. சுத்த தங்கம் ரூ. 13-0-0.

### நரையை ஒழியுங்கள்.

சாயம் முலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும் பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்று உத்தரவாதம் பெறுங்கள் கொஞ்ச நரைக்கு ரூ. 2-8-0 அதற்கு மேற்பட்டது ரூ 3-8-0. எல்லா நரைக்கும் ரூ. 5.

Shree Kamrup Kamachhya Ashram.
No. 6. (P. O. Katrisarai, Gaya)



### சூதகத்தை நிறுத்தியது

குளிகை (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்தவல்லது, நிலைமையை விகாரமாக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3. நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5.



மிகக் கடுமையான கோளாறுகளுக்கு ரூ 8, கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ 4.
(வி. பி.க்கு 12 அணா அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F. D. S. (S. W)
Tollygunge :: CALCUTTA

ஸ்டாகிஸ்டுகள்: 1. ஹாரி & ஸன், 93, சைனாபஜார், மதராஸ், 2. ராகவன் & கோ, ஸ்ரீ நரஸிம்மராஜா ரோட், பெங்களூர் ஸிடி. 3. K. C. மாத்யூ & கோ கொழுஞ்சேரி, திருவாங்கூர், 4. J. திராத் & கோ, மகாத்மாகாந்தி ரோட், கராச்சி. 5. C. M. முகர்ஜி & ஸன்ஸ் லிட், 167, தாம்டோலா தெரு, கல்கத்தா. 6. சிவானந்த செட்டியார் மெடிகல் ஹால் 92, வி தெரு, கொழும்பு. 768, லோயா தெரு, பாடுலா (ஸிலோன்)

ஸ்தாபிதம் 1924.

## பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. "விவாகப் பொருத்தங்கள்" புத்தகம் விலை ரூ. 1. "வாழ்க்கையில் வெற்றி" என்னும் புத்தகம் விலை அணா 6.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"சந்திரிகை" எல்டாம்ஸ்ரோட், தேனாம்பேட்டை போஸ்டு, மதராஸ்.

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரியாரின்

## ஆனந்த பற்பொடி (Reg)



சரீரத்துக்கு வாசப்படியான வாய், பற்கள் இவைகளில் ஒளிந்து கொண்டிருக்கும் பயங்கரமான பற்பல விஷக் கிருமிகளை நாசம் செய்வதுடன், பற்களின் வேர்களைப் பலப்படுத்தி ஒழுங்காயும், அழகாயும் ரக்ஷிப்பதில் இது ஒன்றுதான் சிறந்தது.

இந்தியா கவர்ன்மெண்டு ஏஜண்டு ஜனரல், தென் ஆபிரிக்கா; இந்தியா கவுன்ஸில் மெம்பர்கள், இங்கிலாந்து; இம்பீரியல் கவுன்ஸில் மெம்பர்கள், டில்லி; எக்ஸிகியூடிவ் கவுன்ஸில் மெம்பர்கள், சென்னை; மதராஸ், பர்மா சீப் ஜட்ஜு உள்பட பத்து ஹைகோர்ட்டு ஜட்ஜுகள், சென்னை பிரதம மந்திரி உள்பட இதர மந்திரிகள், மஹாராஜாக்கள் இவர்களால் ஸர்டிபிகேட் செய்யப்பட்டு இருக்கிறது. இத்துடன் நாங்கள் ஜெயம்பெற்ற சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜு மெண்டில் பின்கண்டபடி எழுதப்பட்டிருக்கிறது:— "மார்க்கெட்டில் விற்கப்படும் இந்தியன் பற்பொடிகளுக்குள் ஆனந்த பற்பொடி ஒன்றுதான் அதிகமாய் எங்கும் நன்றாய் பிரஸித்தி பெற்றது என்பதற்குக் கொஞ்சங்கூட சந்தேகமே இல்லை. எங்கும் கிடைக்கும்:

**மாதவிடாய் நின்றுவிட்டால்** எக்காரணத்தினாலும் ருதுபிரபர்தினி கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட் ஒரேநாளில் ஹானியில்லாமல் வெளிப்படுத்தும். ரூ. 3. பர்பதி கர்ப்பத் தடைக்குச் சிறந்தது. தாற்காலிகம் ரூ. 2. நிரந்தரம் ரூ. 4-8-0. வி. பி. அணா 13.

## விரை வீக்கம்

ஹர்னியா, யானைக்கால், முடக்கு வாதம் முதலியவற்றை எளிதில் குணமாக்குவது **பிஷிஹார தைலம்.** தடிப்பு, வலி, வீக்கம், விரைவில் மாயமாய் மறையும் ரூ. 3. உள் மருந்து ரூ. 2. வி. பி. அணா 13.

**மகரத் பஜா**— தோலா. ரூ. 8-0-0
**சியவனப்ராஷ்** டின் விலை ரூ. 2-8-0
**திராக்ஷாரிஷ்டா** புட்டி ரூ. 2-8-0
**அசோகாரிஷ்டா** புட்டி ரூ. 2-8-0
**ஸரிபாத்யரிஷ்டா** புட்டி ரூ. 2-8-0
**தசன சன்ஸ்கர்** (பல்வலிக்கு) ரூ. 1.

KAVIRAJ
R. N. CHAKRAVORTY (S W.)
BHOWANIPORE. CALCUTTA 25.
Stockist: APPAH& Co. 286, China Bazaar Rd. MADRAS.

## மீண்டும் யௌவனம்

★

வாழ்க்கையின் சிகரத்தில் இருக்கலாம்



ஒவ்வொருவருக்கும் முதுமை பருவமுண்டு. சிலருக்கு 30 அல்லது 40 வயதிலேயே இளம் பருவத் தவறுகளின் முதுமை அனுபவிக்கின்றனர். ஆண், பெண் இரு பாலரும் முதுமையை ஒழித்து வாழ்க்கையை நன்கு அனுபவிப்பதற்கு சாஸ்திரீக முறையில் சிகிச்சை செய்ய வல்ல நிபுணர் இருக்கிறார். அவரிடம் உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் ஆலோசிக்கலாம். வீர்யமின்மை, பௌருஷமின்மை, நரம்புத்தளர்ச்சி, வெள்ளை, வெட்டை, வெண்குஷ்டம், மாதவிடாய்க் கோளாறுகள் எல்லாம் நிவர்த்திக்கப்படும்.

**ஸ்திரீகளுக்கு (கோஷா) பிரத்தியேக வசதிகள்.**

குறிப்பு: சிகிச்சைக்கு உத்தரவாதம் உண்டு, ரகசியமாய் வைத்துக்கொள்ளப்படும்.

ஆலோசனை நேரம்:
காலை 8-12 வரை; மாலை 4-7 வரை. ஞாயிறுகளில் காலை 8-12 வரை மட்டும்.

## டாக்டர் நாரு

ஸெக்ஸாலஜிஸ்ட்ஸ்

**நாரு ஆஸ்பத்திரி,**
**24, பிராட்வே, மதராஸ்.**
பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவும்.

**நம்பிக்கையிழந்ததாகத் தோன்றியபோதிலும் குழந்தை காப்பாற்றப்படலாம்.**

ஜம்மியின்

## லிவர்க்யூர்

"காம்ப்ளிகேட்"



சூல் குலைக்கட்டி வியாதிகளினால் ஏற்படும் சிசு மரணம் ஜம்மி லிவர்க்யூரினால் மிகவும் குறைந்திருக்கிறதென்று ருசிக்கப்பட்டிருக்கிறது.

சூல் குலைக்கட்டிகள் முற்றிப்போன சமயத்திலும் அற்புதமாக குணமளிக்கிறது.

J. 63.—Tamil.

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ், தலைமை ஆபீஸ்: மைலாபூர், மதராஸ்






ஒவ்வொரு உடையிலும் சீக்கிரம் மலினமாகும் பாகங்கள் உண்டு — அந்த பாகங்களை சொற்பமாக சோப்பைத் தேய்த்து. தண்ணீரில் நனைந்து அடித்துத் துவைப்பதால் அதிகமாகக் கெட்டுப்போகக் கூடினவை.

உங்கள் துணிகளை ஸன்லைட் முறைப்படி சுத்தம் செய்து அடித்துத் துவைப்பதனுலேற்படும் நாசத்தை விலக்குங்கள்.

ஸன்லைட் சோப்பின் ஏராளமான சுயமாக இயல்கிற நுரையை நனைந்த துணியிடையே புகுத்திக் கசக்கி, பிறகு அலசி சுத்தம் செய்தால், துணி மிக தூய்மையாகவும், வெண்மையாகவு மாறுகிறது... அத்துடன் உங்கள் ஆடைகளுக்கு, இச் சுத்தமான சோப்பை பயன் படுத்துவோருடைய இஷ்டபோகமான தோகையை யொத்த மிருது தன்மையும் ஏற்படுகிறது. ஸன்லைட் உங்கள் துணிகளுக்கும், அவையின் சாயங்களுக்கும் குணமளிப்பதோடு, உங்கள் கைகளை மிருதுவாகவும், மழமழப்பாகவும் வைத்துக் கொள்ளுகிறது.




## ஸன்லைட் சோப்

S. 79 50 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED



## பாக்யங்களுள்

சிறந்ததும், பூஷணங்களுள் முதன்மையானதுமான கூந்தலைக் காலதாமதமின்றி கேசவர்த்தினியைக்கொண்டு பெறுங்கள்.

மூக்கையும் மோவாய்க்கட்டையையும் மாற்றமுடியாது. ஆனால் கூந்தலையோ வித விதமாயும் விசித்திரமாயும் பலவாறு ஜோடிக்கலாம்.

கூந்தலை ஜோடிக்கு முன்னர், கேசவர்த்தினியின் உதவியால் அபரிமிதமான கூந்தலைப் பெறுங்கள். கறுத்து அடர்ந்த கூந்தலினால் முக அழகையும், கேசவர்த்தினியினால் கூந்தலையும் அழகுபடுத்திக்கொள்ளுங்கள்.

## கேசவர்த்தினி

கூந்தலை காப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது. விலை அணா 12. மேற்செலவு வேறு. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை,
"ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட்,
பவர் ஹவுஸிற்கு அடுத்தது. கோயமுத்தூர்.

வருஷப்பிறப்பு வெளியீடு




லக்ஷ்மி டாக்கீஸ் — குடியாத்தம். நியூ ஸினிமா — திருப்பாப்புலியூர்.
கிரௌன் டாக்கீஸ் — வேலூர். டைமண்ட் ஸினிமா— கும்பகோணம்.

டிஸ்ட்ரிபியூட்டர்கள்:

மதராஸ் & ஆந்திரா: ஜயகுமார் பிலிம்ஸ்
213, கோவிந்தப்பநாயக்கன் தெரு, மதராஸ் 1.
தஞ்சாவூர் & திருச்சி: கரூர் பிலிம்ஸ் சர்க்யூட்
கரூர்.

வட & தென்னாற்காடு, செங்கல்பட்டு:
ஏ. கிருஷ்ணசாமி, வேலூர்.
மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி:
ஜானகி பிக்சர்ஸ், சிவகாசி.

சுதேசமித்திரன்
வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XVIII] வியஜு: பங்குனிமீ 31௳ ★ 1947-ஆ ஏப்ரல்மீ 13௳ [No. 11

# டில்லி தர்பார்!

இன்று தேசத்தவர் திருஷ்டியெல்லாம் திரும்பியிருக்கும் திக்கு புதிய டில்லி. அங்கு புதிய வைஸ்ராய் லார்ட் மவுண்ட் பாட்டன் பிரபு நடத்திவரும் அரசியல் தர்பாரில் அனைவருடைய கருத்தும் ஒன்றியிருப்பதில் வியப்பில்லை. மகாத்மாஜி—வைஸ்ராய் சம்பாஷணை தொடர்ந்து நடந்திருக்கிறது. அடுத்தபடியாக ஜனாப் ஜின்னாவின் பேட்டி. வைஸ்ராய் இத்தலைவர்களுடன் நடத்திய சம்பாஷணையின் போக்கு என்ன? இதில் முக்கியப் பிரச்னைகள் யாவை? இவையெல்லாம் இன்னும் வெளியாகவில்லை. அந்தரங்கமானவை.

குறிப்பிட்ட காலத்துக்கொருமுறை புதிய வைஸ்ராய்கள் பதவி ஏற்பதும், இதை யடுத்துத் தேசத் தலைவர்களை அழைத்துப்பேசுவதும் சர்வசகஜமான காரியங்கள் என்பதை இந்நாட்டினர் நன்கறிவர். இப்போது மவுண்ட் பாட்டன் பிரபு நடத்தும் சம்பாஷணையும் அத்தகையதுதானா? இல்லை. புதிய வைஸ்ராயைத் தலைவர்கள் சந்தித்துச் சம்பாஷிப்பதென்ற படலம் மவுண்ட் பாட்டன் பிரபுவின் பதவிக்காலத்தோடு தீர்ந்துவிடும். இந்தியாவில் கடைசியாக வேலைபார்க்கும் வைஸ்ராய் தாமேதான் என்று அவர் மகாத்மாவிடம் தெரிவித்திருக்கிறார். இந்த உறுதியில் தமக்குப்பரிபூர்ண நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாக மகாத்மாவும் கூறி யிருக்கிறார். முந்திய வைஸ்ராய்கள் நடத்திய சம்பாஷணையின்போது ஏற்பட்ட பலனே தான் இப்போது நடக்கும் சம்பாஷணையிலும் என்றாகாமல் மவுண்ட் பாட்டன் கூறிய கருத்துக்கு ஒத்தமுறையில் என்ன நடந்திருக்கிறது? அதுதான் பிரச்னை.

இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் தேசத்தில் பல்வேறு பகுதிகளில் வகுப்புக் கலகங்கள் மூண்டு எதிர்கால ஏற்பாடுகளில் கவனம் திரும்பமுடியாமல் தடுமாற்றமான நிலைமை உண்டுபண்ணப்படுகிறது. ஒரு பகுதியில் கலகம் கட்டுக்கடங்கியதென்றால் மற்றொரு பகுதியில் விபரீத நிலைமை முளைக்கக் காண்கிறோம். மக்களின் அன்றாட வாழ்வு பொருளாதாரச் சீர்கேட்டால் நாளுக்குநாள் நலிந்து கொண்டுவருகிறது. இதற்கு உண்மைக்காரணம் மத்திய ஆட்சியில் நிரந்தரமான சர்க்கார் இல்லாததுதான். பேச்சளவில் உன்னதமான கொள்கைகளையும், லட்சியங்களையும் வெளியிட்டுவிட்டு செய்யவேண்டியதை உடனடியாகச் செய்து தீர்க்காவிட்டால் அது ஏற்கனவேயுள்ள நிலைமை மேலும் சீர்கேடுறவே உதவும்.

புதிய வைஸ்ராய் இதுகுறித்து ஒன்றும் கூறக்காணோம். இப்பிரச்னையை எவ்வளவு சீக்கிரமாகத் தீர்க்கவேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் தீர்த்துவைத்துவிட வேண்டும் என்றும், இதில் தலைவர்கள் தம்முடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும் பதவி ஏற்ற சந்தர்ப்பத்தில் மவுண்ட் பாட்டன் பிரஸ்தாபித்தார். இந்நாட்டினரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு இன்னும் சில மாதங்களில் வெளியேறிவிடப்போவதாகப் பிரிட்டிஷார் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். பழைய வாதங்களையும், சாக்குப்போக்குகளையும் அடியோடு மறந்து புதியதொரு மார்க்கத்தைக் கையாளவேண்டிய கட்டம் பிறந்திருக்கிறது. தாமதித்தால் சங்கடங்கள் பெருகுமென்பதில் சந்தேகம் கிடையாது. வைஸ்ராய் இதை அறிந்து கொண்டிருப்பார்; காந்திஜியும் அறிவுறுத்தியிருப்பார். இதற்கு அனுசரணையாக வைஸ்ராய் செயலாற்றினால்தான் அவர் டில்லியில் நடத்தும் தர்பாருக்குப் பொருளுண்டு.



முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் ஜின்னாவுடன் வைஸ்ராய் புதிய டில்லியில் சம்பாஷிக்கிறார். சம்பாஷணைக்கு முன்பாக வைஸ்ராயும் அவரது மனைவியும் ஜின்னாவை வரவேற்றபோது எடுத்த படம்.

## அட்டைப் படம்

★

ஐந்து தடவை தொடர்ந்தாற்போல் வைஸ்ராய் மவுண்ட் பாட்டனை சந்தித்துச் சம்பாஷணை நடத்தினார் மகாத்மாஜி. முதல்நாளன்று மவுண்ட் பாட்டனும் அவரது மனைவியும் மகாத்மாவை வரவேற்று மாளிகைக்குள் அழைத்துச் சென்றனர். மகாத்மாவும், மவுண்ட் பாட்டனும் காட்சி தருகின்றனர்.



புது டில்லி ஜஸ்வந்த நர்ஸிங் காலேஜுக்கு லேடி மவுண்ட்பாட்டன் சமீபத்தில் போயிருந்தார். குழந்தைகள் பராமரிப்புக்காக அங்கு அளிக்கப்படும் பரிட்சார்த்த அப்பியாசங்களை அவர் பார்வையிட்ட போது எடுத்த படம். நடுவே நிற்கிறார் லேடி மவுண்ட்பாட்டன். அவர் அருகே மேற்படி ஸ்தாபன பிரின்ஸ்பால் மிஸ் மார்கரெட் க்ரெயிக்.



# சர்வஜித்

★

'சர்வஜித்' தெனும் பெயர் சார்ந்தஇவ் வருடமே
சர்வ நற் போகமும் சார்ந்திடச் செய்யுமே!
பர்வதம் போலொளிர் பாரத தேசத்தில்
பச்சிலை போல் பசும் பிள்ளைகள் பொலிவரே!

காலமாம் விருக்ஷமே கருவுயிர்த் தளித்த நற்
கன்னியாம் கனியுமாம் கதியுமாம் விதியுமாம்
ஞாலமாம் தாயுள்ளம் ஞானியர் பேருள்ளம்
நண்ணும்நற் பேரின்பம் நவிலுதற் கெளியதோ?

கன்னலைப் போலவும் கனிரஸம் போலவும்
பண்ணும் நற்கீதமே பாரெங்கும் ஓங்கிட
மின்னிடை நுடங்கியும் மென்கரம் மலரவும்
நன்னடை பயின்றனள் நன்மொழி கூறுவள்!

எண்ணத்தில் புகுந்தபொன் னெழில்மிகு ராணியே
உண்ணவும் உடுக்கவும் உதவிகள் புரிகுவாள்
விண்ணினில் மாமுகில் மழைதனைப் பெய்யுமே
கண்ணினில் ஒளிமிகு காட்சிகள் காணுமே!

திண்ணமாய்த் தமிழர்கள் தீமைகள் நீங்கியே
பண்ணொடு தாளமும் பயில்வுறப் பாடுவர்;
உண்ணிறை உவகையும் உண்மையாம் இன்பமும்
நண்ணியே மாதர்கள் நாட்டியம் செய்வரே!

தீரும் தீச் சோகமே சேரும்நல் யோகமே
தீயிருள் தேய்ந்திடத் தீபங்கள் திகழுமே
ஆருயிர்க் காந்திதன் ஆசிநல் வார்த்தைகள்
ஆயிரம் ஆயிரம் ஆகியே வளருமே.





# தற்கால வீரம்

'சுவை'

'தற்கால வீரம்' என்ற தலைப்பைப் பார்த்ததுமே தற்கால வீரம் வேறு, முற்கால வீரம் வேறு என்று எண்ணுகிறீர்களா? நீங்கள் எண்ணுவது முற்றிலும் சரியே. பாரதம், ராமாயணம் முதலிய புராணங்களையும், பழங்காலச் சரித்திரக்கதைகளையும் படித்தவர்களுக்கு வீரம் என்பது என்ன, வீரர்கள் யார், அவர்களின் வீரச் செயல்கள் எவை என்பன நன்கு விளங்கும். அதைப்போல தற்கால வீரம் என்பது என்ன, வீரர்கள் யார், அவர்களின் வீரச் செயல்கள் தாம் எவை என்பதை அறிய வேண்டுமா? படியுங்கள்.

தற்கால வீரம் 'ஒரு பஸ்ஸில் இடம் பெறுதல். இதிலிருந்து வீரர்கள் பிரயாணிகள் என்பதும், அவர்கள் பஸ்ஸில் இடம் பெறச் செய்யும் முயற்சிகளும், செய்கைகளும் வீரச் செயல்களாகும் என்பதும் நன்கு விளங்குகிறதல்லவா? எப்படி என்று விவரமாகப் பார்ப்போம்.

ஒரு பஸ்ஸில் இடம் பெறுதல் வீரமாகுமா என்ற தயக்கம் வேண்டாம். வீரம் என்பது என்ன? சாதாரண மனிதர்களால் செய்ய முடியாத காரியம் ஒன்றை, ஒருவன் தைரியத்தோடும், துணிச்சலோடும், பல இன்னல்களையும் பொருட்படுத்தாமல் செய்து முடிப்பதுதானே? இதற்கும் இன்று ஒரு பஸ்ஸில் இடம் பெறுவதற்கும் என்ன வித்தியாசம்? நீங்களே சொல்லுங்கள். இனிமேல் வீரர்களைப் பற்றியும், வீரச் செயல்களைப் பற்றியும் விளக்க வேண்டியது தான் பாக்கி.

முதன்மையான வீரர்களின் லட்சணங்களையும், தன்மைகளையும் திருக்குறள் போன்ற பழந் தமிழ் நூல்கள் நன்கு எடுத்துக் கூறுகின்றன. அதைப்போல தற்கால வீரர்களின் தன்மைகளையும், லட்சணங்களையும் கீழ்க்கண்ட ஒரு புதுக் குறளினால் அறியலாம்.

"முண்டியே யடித்து
முன்னால் இடம்
காண்போரே முதல் வீரர்!'

இக்குறளுக்கு விரிவுரையோ, பதவுரையோ, பொழிப்புரையோ ஒன்றுமே தேவையில்லை!

தற்கால வீரத்தின் நிலைக்களம் பஸ் ஸ்டாண்டு. இனி நிலைக்களத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்ப்போம்.

பலவகைப்பட்ட வீரர்கள் பஸ் ஸ்டாண்டில், அணிவகுத்து ஒரு 'க்யூ'வாக நின்றுகொண்டிருக்கின்றனர், போலீஸ்காரனின் கட்டாயத்தினால் நெட்டையாக ஒருவர் குட்டையாக ஒருவர், குடை பிடித்து நிற்பவர் ஒருவர், பருமனாய் நிற்பவர் ஒருவர், பரட்டைத் தலையுடன் ஒருவர், பலமாக யோசனை செய்பவர் ஒருவர், பக்கத்தில் பார்யை (மனைவி)யுடன் நிற்பவர் ஒருவர் இப்படியாகப் பலவகைப்பட்ட வீரர்கள். எந்த நிமிஷமும் தயார் யுத்தத்திற்கு! இதோ பஸ்ஸூம் வந்துவிட்டது. 'க்யூ' வெல்லாம் கோவிந்தா! குபீரென்று கொரில்லாப் படையினர்போல் எல்லாரும் பாய்கின்றனர். பாவம் போலீஸ்காரன்! பஸ்ஸிலிருந்து இறங்குபவர்கள் தள்ள, பஸ்ஸில் ஏறப்போகிறவர்கள் நெருக்க, நடுவில் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறான்! உடம்பு வேண்டாம் கையை விட்டால் போதும் என்றபடி 'நமக்கேன் ஐயா இந்த எளவு சங்கடம்? நல்லதைச் சொன்னால், நம்மையே நசுக்கிப் பிடறாங்கோ,' என்று கூறிக் கொண்டே திணறித் திண்டாடி தள்ளி வந்து நின்று எல்லோரையும் அணிவகுக்கப் பார்க்கிறான், ஒரு க்யூவாக. அதெல்லாம் நடைபெறுமா, நம் வீரர்கள் முன்பு?

இதற்கிடையில், 'ஸார், ஸார் காலை மிதிக்கிறீங்களே, ஸாரீ, எக்ஸ்கியூஸ்மீ. ஐயா, மூக்குக்கண்ணாடி ஐயா, அட, ஏன் இப்படி கையைப் போட்டு நசுக்கிறீங்க, லேடீஸ் மிஸ்டர், லேடீஸ் மிஸ்டர், தள்ளு அய்யா அங்கிட்டு, வழியை விடேன் ஐயா, கொஞ்சம் இருங்க, குல்லாகீளே விழுந்திருச்சு ஐயா என்றிப்படிப்பட்ட பலவகை வீர கோஷங்கள். இடமில்லை, ஏறுதீங்க ஸார், ஏறுதீங்க என்ற கண்டக்டர் நாதம் (சங்கநாதம் போல) ரைட், ரைட் என்ற வார்த்தை பாணங்கள்.' பஸ் கிளம்பி விட்டது வீரர்களை ஏற்றிக்கொண்டு. இடம் கிடைக்காத வீரர்கள் அடிபட்டவர்கள்போல் ஆயாசம் அடைந்த போதிலும், அடுத்த யுத்தத்திற்குத் தயாராகின்றனர். மீண்டும் போலீஸ்காரனின் வீரம், க்யூ எல்லாம்தான்.

வெற்றிபெற்ற முற்கால வீரர்களின் சின்னங்கள் உடம்பிலே காயம், உடைந்த வாள், குறைந்த அங்கங்கள் முதலியனவாம். தற்கால பஸ் வீரர்களின் வெற்றிச் சின்னங்கள் கலைந்த கிராப்பு, கசங்கிய ஷர்ட், பாதி உடம்பிலும், பாதி கீழேயும் புரளும் அங்கவஸ்திரம், ஒற்றைக்காலில் மட்டும் செருப்பு முதலியனவாம். இப்படிப்பட்ட வீரர்கள் நிற்கும் காட்சிதான் என்ன? ஒரு கையால் பஸ் கம்பியைப் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையால் அங்கவஸ்திரத்தையும், ஷர்ட்டையும்,



மணிபர்ஸையும் மாறிமாறி சரிப்படுத்திக்கொள்ளும் அழகு தான் என்ன?

இவ்வளவும் போதாது என்று இன்னும் சில சோதனைக்கு ஆளாகிறார்கள் இவ்வீரர்கள். சார், டிக்கட் என்று கண்டக்டர் கேட்டவுடனேயே மணிபர்ஸைத் திறந்து சில்லரை எடுக்க முயலும்போது, திடீரென்று பஸ் ஒரு ஸ்டாப்பில் நிற்பதும், முன்னால் நிற்பவரின்மீது அலைபோல ஒரு மோது மோதுவதும், அது தாங்காமல் அவர் பஸ்ஸின் கோடிவரை ஒரேயடியாய்ச் சாய்வதும், சாதாரண சோதனையா என்ன? பிறகு பரஸ்பரம் இருவரும் ஒரு புன்னகையை பரிமாறிக்கொள்வதும்...அடடா, பார்க்கப் பரவசமான காட்சி!

அடுத்த 'ஸ்டாப்பில்' செக்கிங் இன்ஸ்பெக்டரின் முற்றுகை. கருப்பங் கொல்லையில் புகுந்த யானை மாதிரி எல்லாரையும் அவர் துவைத்துக் கொண்டிருக்கும்பொழுது, பஸ் ஒரு மூலை திரும்புவதும், எல்லாரும் ஒன்றாக முட்டிக்கொள்ளுவதும் முக்கியமான வீர ப்ரதாபங்களில் ஒன்றாகும்.

இப்படிப்பட்ட வீரர்களுக்கு தர்மசங்கடமான நிலைமை இனிமேல்தான் தற்கால பஸ் வீரர்களின் தன்மைகளை எடுத்துக் காட்டும்.

இடம் விடுவார்
இடர்ப் படுவார்
இடம் விடாதார்
இடியே படுவார்!

என்ற புதுக் குறளைப்பாருங்கள். வயதான ஒருவரோ அல்லது, ஒரு ஸ்திரீயோ நிற்கிறார்களே என்று மனமிரங்கி, அவர்களுக்கு உட்கார இடங் கொடுத்தால், நமக்குத்தான் இடைஞ்சல். நின்றுகொண்டே முன் கூறிய சோதனைகளுக்கும், முற்றுகைக்கும் ஆளாக வேண்டியிருக்கும். இதற்கெல்லாம் மேலாக கண்டக்டரின் நிர்ப்பந்தம். 'ஸார் போங்கோ உள்ளே, போங்க ஸார் உள்ளே' என்ற ஓயாதபல்லவி. சில சமயங்களில் கண்டக்டர் நம்மெல்லியைப் பிடித்து, உள்ளே தள்ளாததுதான் குறையாயிருக்கும். இருந்தாலும் சுத்த வீரர்கள் என்று அவன் நம்மைச் சும்மா விட்டு விடுகிறான் போலும்!

பிறர் உட்கார இடம் விடாமல், நம் இடத்தில்நாமே இடித்த புளி மாதிரி உட்கார்ந்தாலோ இன்னும் இடைஞ்சல்தான். நமக்கு அடுத்தாற்போல உட்கார்ந்திருப்பவர் எழுந்திருந்து போவதும், அந்த இடத்தைப் பிடித்துக் கொள்ளப் போட்டி போட்டுக்கொண்டு இருவர் நம்மீது வந்து விழுவதும் என்ன போங்கள்! இப்படிப்பட்ட நாம், சுகானுபவத்தை அறியும் மெய்ஞானிகள்போல், 'இடியானுபவத்தை' அறிகிறோம். அடாடா! இடியானுபவத்தின்' இனிமை அதில் திளைத்தவர்களுக்கே தெரியும். இன்னும் பஸ் நிற்கும்பொழுதும், புறப்படும்பொழுதும். திரும்பும்பொழுதும் நிற்பவர்களின் முழங்கைகளினால் மண்டையிலும், கால்களினால் விலாவிலும், சில சமயங்களில் முதுகிலும் கிடைக்கும் இடிகளினால் இடம்விடாதார் இடியே படுவார் என்றவாக்கு ஊர்ஜிதப்பட்டுப் போகிறதில்லையா?

வீர சுவர்க்கம் கிடைத்தால் ஒரு வீரனுக்கு எவ்வளவு சந்தோஷம்! அதைப் போல குறிப்பிட்ட இடத்திற்குக்காலதாமதம் இன்றிப் போய்ச்சேரும் பஸ் வீரனுக்குத்தான் எவ்வளவு சந்தோஷம் ஏற்படும்! பஸ் வீரர்களாகிய நாம், இதை அனுபவ பூர்வமாகக் கண்டதில்லையா?



## ஞாபகப்படுத்துகிறோம்

'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்



அசிய தேசங்கள் மகாநாட்டுக்கு வந்திருந்த இந்தோனேஷிய பிரதமர் ஷாஸிரும், நேருவும்.





குடந்தை நகர எல்லேக்குட்பட்ட ஏரண்டபுரத்திலுள்ள ஸ்ரீ கோடீச்வர ஸ்வாமிக்கு மேற்படி ஆலயப் புது தர்மகர்த்தா ஸ்ரீ எம். கே. சாமிநாத செட்டியார் சுமார் ரூ. 1000 செலவில் சந்திரப்பிரபை, சூர்யப் பிரபை இரண்டையும் உபயம் செய்திருக்கிறார்.




## 64

## சத்திய சோதனை

இப்பரந்த உலகத்திலே வாழப் பிறந்த நன் மக்கள் பெற விரும்பும பாக்கியங்கள் பல திறப் பட்டனவாயுள்ளன. சுந்தரப்பெருமானின் பொற்கமல மலர்ப் பாதங்களில் இரண்டறக் கலப்பதையே பாக்கியமெனக் கருதுவோர் சிலர். அழகும் அறிவும் நிறைந்த கன்னி ஒருத்தியைக் கடிமணம் புரிந்துகொண்டு கவலே யென்பதே துளியேனும் இல்லாது தூய வாழ்க்கை புரிய விரும்புவோர் சிலர். முன்னதுவே பேரின்பம்: பின்னது தான் சிற்றின்பம்.

பேரின்ப சாம்ரா[illegible]ஜை அடைவதற்குக் கட[illegible]டிய பல்லாயிரம் படிகளு[illegible] முதற் படியே சிற்றின்ப வாழ்க்கை. இல்லற நெறியிலே முறைமாருது நடந்து, துயரப்படுவோருடைய அவல நிலேயை அகற்றித் தேச சேவை புரிந்து, கடைசியில் இறைவனை அடைய வேண்டுமென்பதே ஆன்ருேர்கள் காட்டியுள்ள வழி. இவ்வில்வாழ்க்கையின் முத்திரையாக—ஞாபகார்த்தமாக—நன் மக்களேப்பெறும் பேறும் மனிதரால் வேண்டப்படுவதே.

தனவணிகர் குலத்திலே பிறந்த தனபதி யென்பவன் கடைசியாகக் கூறிய புத்திர பாக்கியத்தையே எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். பல காலயாகியும், தன் வம்சத்துக்கு ஒரு வழி முறைத் தீபம் உதிக்க வில்லேயே என்பது அவனுடைய தீராக் குறை. பற்பல தான தருமங்களேச் செய்தும், விரதங்கள் பலவற்றை மேற்கொண்டொழுகியும் வந்த அவனுக்கு இறைவன் அப்பாக்கியத்தைக் கடைசியில் அளித்தார். மாணிக்கம் போன்ற குழந்தை ஒன்றை அவன் அடைந்தான், அது பெண் குழந்தை: ஆனுலும் அவனுக்கு மனக் குறைவில்லே. ஆண்குழந்தை சாதிக்கும் அளவு பெண் குழந்தையும் சாதித்தே தீரும் என்பது அவனுடைய நம்பிக்கை.

காலத்தின் அதிவேகமான முன்னேற்றத்தில் குழந்தை குமாரியாளுள்-பருவம் வரப்பெற்ருள். மதுரையிலே வாழும் தன் தங்கை [illegible]க்கு அப்பெண்ணே மணமுடிக்க வேண்டுமென்பது தனபதியின் அவா. அப்பையனே முன்னமேயே ஒருத்தியை மணம்புரிந்து வாழ்ந்து வருகிறவன். அக்காலத்தில் வணிகர் மரபில் ஒருவன் இரு மனேவியரை மணந்துகொண்டு வாழ்வதற்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லேபோலும். ஆகவே, தன் மனத்துக்கு உகந்த அவனுக்கே தன் மகளேக் கொடுத்துத் தன் கடமையைக் காத்துக்கொள்ள வேண்டுமென்று கருதினன் தனபதி.

இவ்விஷயத்தில் குமாரியையும் கலந்துகொண்டான். அவள் தன்னு[illegible]டைய அத்தானேப்பற்றிச் சதா காலமும் சிந்தித்துக்கொண்டிருப்பவள். ஆதலின், 'என் அத்தானே நான் மணந்துகொள்ளக்கொடுத்து வைத்திருக்க வேண்டுமே' என்று கூறித் தந்தையிடம் தன் மனக் கருத்தை ஆவலுடன் அறிவித்துவிட்டாள். இவ்விஷயத்தைப் பெரியோர்களிடமும் கூறி அபிப்ராயத்தைக் கேட்ட தனபதியின் முன்பு அவர்கள் முகமலர்ந்து தங்கள் சம்மதத்தையே தெரிவித்தனர். இனி, மதுரையில் வாழும் அவ்வுறவினனுக்குத் திருமுகம் போக்கி வரவழைக்க வேண்டியதுதான் செய்ய வேண்டுவது. திருமுகம் எழுத நன்னுள் ஒன்றைப் பெரியோர்கள் மூலமாய்க் கேட்டறிந்து, அந்த நாளே எதிர்பார்த்தவனுய்க் குமாரியுடன் வாழ்ந்து வரலானுன். சின்னட்களில் அவனுடைய மனேவி விண்ணுலகேகினுள்.

குழந்தையின் திருமணத்தைக் காணுமல் கண்ணே மூடிச் சென்ற தாயின் மரணத்தை நினேத்து நினேத்து ஏங்கியது அக்குழந்தையுள்ளமும்.

திருமுகத்தை எழுதியனுப்புதற்கு ஏற்ற நாள் தடைப்படவே மற்ருெரு நாள் பார்க்கப்பட்டது. ஆனுல் அந்த நாளும் முன்னுளேப் போலத் தீவினேயியற்றக் காத்திருந்ததை யாவரே அறிவார்?

இடைக்காலத்தில் விதியின் ஆக்ரமிப்புக்கு ஆளாகிய தனபதி மண்ணே நீத்து விண்ணே அடைந்தான். அவனுடைய ஆசை, பாசம், தனம், வீடு யாவுமே கண்ணீர் விட்டன. குமாரி கூவிக் கதறினுள். ..."இனி என் செய்வது? மாண்டவர் மீள்வதுண்டா?" என்ற வினுவிற்கு விடை தெரிந்த பெரியோர்கள் குமாரியைத் தேற்றினுர்கள். இறந்தவனுக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களேயும் முடித்தனர்.

வஸந்த காலத்திலே ஆடிப் பாடும் மயில், குயில்களேப்போல மிக்க குதூகலத்துடன், வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்த குமாரி, அதே காலத்தில் பாலேவனத்திலே பரிதவிக்கின்ற பரதேசியைப்போலக் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள்.

அவளுடைய எதிர்கால நினேவுகளேக் கனவுகளாக்கிய அந்தத் தீய விதியை அவளுடைய இதயம் எத்தனே விதங்களால் சபித்தது! ஆனுல், "விதியைச்சபித்த எனது

மதி எவ்வளவு மழுங்கிவிட்டது!'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

அவ்வூரிலுள்ள சில உறவினர்கள் அங்கே வந்து துக்கம் விசாரிக்கவேண்டிய சம்பிரதாயத்தை முடித்துப் பின்பு ஆகவேண்டிய காரியங்களைக் கவனிக்கலாயினர். குமாரியின் விருப்பத்தையும், இறந்துபோன தனபதியின் எண்ணத்தையும் நன்கு புரிந்துகொண்டிருந்த அவர்கள் மதுரையில் வாழும் அவளுடைய அத்தை மகனுக்குச் செய்தியைத் தெரிவித்து உடனே வருமாறும் கூறியனுப்பினர்.

மதுரையில் அன்று காலை வேளையில் தன் மாதுலன் மடிந்த சமாசாரத்தைக் கேட்டான் இளம் வணிகன். பெருத்த துயரத்தில் மூழ்கிப் பின் தன்னைத்தானே தேற்றிக் கொண்டவனாய்க் குமாரியின் இருப்பிடத்திற்கு வந்தான். அவனை அவள் கண்டாள். ஆறினதுபோல் அடங்கியிருந்த கவலைப் புண்களெல்லாம் கீறிவிட்டது போலக் கொந்தளித்து எழுந்தன. அவளை எப்படித் தேற்றுவதென்பது அவனுக்குப் புரியவில்லை; அவனும் அழுதான். அழுகையை அழுகையால்தான் போக்கமுடியும் என்று கருதினன் போலும். முடிவில் அவளுடைய காதல் ஒளியின் முன்பு மரணவிருட்டின் பயங்கரக் கொந்தளிப்புகள் மங்கி மறைந்தன. அவனும் நிமிர்ந்து நின்றான். ''கண்ணே! கவலையை அடையவும், அதை எதிர்த்து நிற்கவுமே நாமிருக்கிறோம். உனது தாயுந் தந்தையும் அமர உறவினராய் இருந்து நமக்கு நல்லாசி கூறுவார்கள் என்பதில் தடையில்லை. அவர்களுடைய ஆசியே நமக்குப் பலம்.'' என்று கூறி அவனை மற்ற உறவினர்கள் வந்து பார்த்தனர்.

''நான் ஊருக்குச்சென்று எல்லோர் முன்னிலையிலும் இவளை மணம் புரிந்து கொள்ளுகிறேன். எங்கள் இருவர் மனமும் ஒருவரை ஒருவர் மணந்துகொண்டதாக உறுதி செய்துவிட்டன. இனி நான் இவளுடன் என் ஊருக்குச் செல்லுகிறேன்'' என்று கூறிக் குமாரியுடன் புறப்பட்டான் மதுரையை நோக்கி. பிரபஞ்சத்தில் அவனைத் தவிர்த்து வேறு கதியில்லை என்பதை நன்குணர்ந்த குமாரி அவனுடைய நிழலேபோல அவனைப் பின் தொடர்ந்தாள். வழியிலே திருப்புறம்பயம் என்றதொரு திருப்பதியில் தங்க நேர்ந்தது. அங்கேயுள்ள ஆலயத்துட் புகுந்து கிணற்று நீரில் இருவரும் குளித்தனர். பக்கத்தேயிருந்த வன்னி மரத்தடியில் அருமையான உணவை ஆக்கி அமுதம் போலப் படைத்தாள் குமாரி. பிறகு தானும் உண்டு அவனுடன் இன்ப உரைகள் ஆடி நித்திரை கொண்டாள்.

நள்ளிரவு. இருவரும் நல்ல உறக்கத்தில் ஈடுபட்டிருந்தனர். இருள்மாதின் கண்ணையொத்த கருநாகமொன்று அப்போது நெளிந்துகொண்டே வந்தது. அது விதியின் தூதாகத்தான் வருகிறது என்பது எவருக்கும் தெரியாது. அதனுடைய நச்சுப் பற்கள படுத்துக்கொண்டிருந்த இருவருள் குமாரனுடைய மேனியைக் கரையாக்கிவிட்டுக் களித்தன. நஞ்சினை ஏற்றி நமது கடமையை முடித்துவிட்டோம்' என்ற பூரிப்புடன் அகன்றது அக்கருநாகம்.

குமாரன் விழித்தெழுந்து பின் அலறிக்கொண்டே வீழ்ந்தான். குமாரியின் கண்ணீர் வெள்ளம் அவனுடலை நனைத்தது. அவளுக்கு இனி யார் கதி? தந்தையையும் தாயையும் இழந்து நாதனையே நம்பி வந்த நங்கைக்கு இனி யார் துணை? செல்வக் குடும்பத்திலே சீரும் சிறப்புங்கொண்டு மேன்மையாய் வாழ்ந்து வந்த அவள் இப்பொழுது திருப்புறம்பயத்தின் வன்னி மரத்தடியில் செத்துக் கிடக்கும் நாயகன் உடல்மீது வீழ்ந்து கிடக்கிறாள்! பிரபஞ்சத்தின் விசித்திரமான—ஆனால்—சர்வசகஜமான இம்மாதிரிச் செயல்களைக் கண்டு பெரியோர்கள் அதிசயப்படுவதில்லை; பரிதாபப்படாமலோ இருப்பதில்லை!

அப்போது அவள் மனத்தில் பெரியோராய்ப்பட்டவர் ஆண்டவனே! அவ்வாண்டவனிடம் முறையிட்டாள. ''இறைவா! யாவரையும் இழந்து நாதனையே நம்பி வந்தேன்! நாதனும் நீங்கினல் நானென்ன செய்வேன்! இது தான் தர்மமா?'' என்று முறையிட்டுப் பின் தன் நாயகனது முகத்தை உற்று நோக்கினள்.



'என் நாயகனே! இரு கண்மணியே! உமக்கு அரவமா யமனுகத் தோன்ற வேண்டும்? முருகனைப்போன்ற உம்மைக் கண்டு முருகனென்றே விளையாட வந்ததோ அக்கருநாகம்? அல்லது நீர்தான் அதனுடன் விளையாடச் சென்றீரோ! இனி நான் எங்ஙனம் சகிப்பேன்'' என்று கூவினள்.

அக்குரல் ஒலிக்காது இடையில்லை. உண்மையான கற்பு வாய்ந்த கன்னியொருத்தி கதறுவதைப்



பிரபஞ்சமே கேட்டுக்கொண்டிராதென்பது சத்தியம். அக்குரல் ஒரு மடத்திலே தங்கியிருந்த திருஞானசம்பந்தருடைய செவியில் பாய்ந்தது. சம்பந்தர் ஸ்தலந் தோறும் சென்றுகொண்டிருக்கும் போது அன்று அவ்விடத்திற்கு வந்து மடத்தில் தங்கியிருந்தார். சோகச்சுடுகுரல் செவிப்பட்டதும் ஓடோடியும் அங்கே வந்தார். ''பெண்ணே! யாது குறை? ஏன் அலறுகிறாய்! ஈதோ இவன் இறந்து கிடக்கக் காரணமென்ன?' என்று கேட்டு அபயமளித்து நின்றார் சம்பந்தர்.

''ஸ்வாமி! நான் துர்ப்பாக்கியசாலி. இறந்துகிடக்கும் மனிதர் என் நாயகன்! அரவுதீண்டியதால் ஆவியகன்றார். குறைதீர்த்துக் காக்கவேண்டும்'' என்று அவர் பாதத்தில் வீழ்ந்தாள் கன்னி.

சம்பந்தர் உள்ளம் கருணைகொண்டது. இனி இறைவன் கருணைகொள்ளத் தடையுமுண்டா? திருப்பதிகம் பாடத்தூங்கியெழுந்தவன் போல் எழுந்தான் இளம் வாணிகன்.

''ஸ்வாமி! தங்கள் கருணை எனக்கும் கிடைத்ததா?'' என்று கூறிப் பணிந்து நின்றான் இளைஞன். ''அநாதிக்கு ஆண்டவன் துணை' என்னும் பழமொழி பொய்க்காது என்பதை ஞாபகமூட்டிய சம்பந்தர் குமாரனை நோக்கி மேலும் கூறினார்.

''மகனே! நீ இம்மகளை இங்கேயே மணம் புரிந்துகொண்டு செல்க,'' என்று கூறக்கேட்ட இளைஞன், 'ஸ்வாமி, எமது குலத்தவர் எவருமே இல்லாத இவ்விடத்தில் நான் எப்படி இவளை மணப்பது?'' என்று கேட்டான், அவர் அவனுடைய சிந்தனையில் மறுபடியும் வேறு உணர்ச்சி தோன்றப் போவதை உணர்ந்தவராய் மௌனம் சாதித்தார். ''ஸ்வாமி'' தாங்களே என்னைப் பிழைப்பித்தீர்கள், ஆகையால் தாங்களே எனக்குத் தாயும் தந்தையும் ஆவீர். குருவும் தெய்வமும் ஆவீர்; சுற்றமும், நண்பரும் தாங்களே!'' என்று கூறிப் பொழுது விடிந்ததும் விதிமுறைப்படி அவ்வாலயத்திலேயே இலிங்கத்தின் முன்னிலையில் மணந்துகொண்டு சம்பந்தரின் ஆசியைப் பெற்றான். பிறகு மதுரைக்கு மிக்க குதூகலத்துடன் வந்து சேர்ந்தான்.

எல்லோரும் வரவேற்றனர். இரு மனைவிகளோடும் இன்ப வாழ்க்கையைச் சத்தியம் பிசகாமல் நடத்திவந்தான் வணிகன்.

மூத்தமனைவிக்குப் பல பிள்ளைகளும், இளையவளுக்கு ஒரு புத்திரனும் பிறக்கக் காலச் சக்கரஞ் சுழன்று கொண்டேயிருந்தது. திடும்பவும் ஒரு புயல்! மூத்த மனைவியின் மக்கள் இளையாளின் மகனை அடித்தனர். அதுவே காரணமாக இரு தாய்மார்களுக்கும் போராட்டம் மூண்டது. மூத்தவள் இளையவளை மிகவும் வெகுண்டு, ''நீ எந்த ஊர்? என்ன சாதி? யார் மகள்? யாருக்கு முன்னால் மணம் செய்து கொண்டாய்? பரத்தையாகிய நீ இவ்வளவு வீறுகொள்ளுதல் கூடாது'' என்ற சுடு சொற்களை வாரியிறைத்தாள். அதைப் பொறுக்க முடியாமல் குமாரி சுந்தரப் பெருமான் ஆலயத்துட் புகுந்து பலர் காணக் கூவினாள். ''என் மானத்தைக் காக்கவேண்டும். நான் மணந்துகொண்டதை நிரூபிக்கவேண்டும்'' என்று கதறிய அவள் முன்பு ஒரு பெரிய அதிசயம் நடந்தது. அது நடைபெறவில்லையானால் அவள் மடிந்தே போயிருப்பாள்.

வன்னிமரம், கிணறு, லிங்கம் மூன்றும் அங்கே தோன்றின அப்போது!

இதனைக்கண்ட குமாரி தன் உள்ளத்தின் ஒவ்வொரு அணுவிலும் ஆனந்தம் நிறைந்தவளாய் மூத்தவளை அழைத்து ''நான் மணம் புரிந்ததற்குச் சாட்சியைப் பார்' என்று காட்டினாள் மூன்றையும். மூத்தவள் மிகவும் அஞ்சி நின்றாள். வணிகன் இதையறிந்து பெரிதும் வியப்புற்றான். மூத்தவளை மிகவும் கடிந்துகொண்டு விலக்கத் தீர்மானித்தான். அப்போதுதான் பெண்ணின் இதயம் வெளிப்படலாயிற்று. உலகத்தில் பெண்கள் சகிப்பின் இருப்பிடம் என்பதை யாவரும் உணரும்படியாகக் குமாரி கூறிய வார்த்தை அமைந்தது. 'நாதா! இவளால் அல்லவா என் பதிவ்ரதத்தன்மை வெளிப்பட்டது. ஆதலின் இவள் எனக்கு ஒரு தாயானாள். நாங்கள் இருவரும் இனி தங்களுடைய இரு கண்களைப்போல இருந்து வருவோம்'' என்று கூறிய குமாரியைத் தெய்வப்பெண் என்றல்லவா கூறவேண்டும்!

எல்லாவற்றிற்கும் மேலாகப் போற்ற வேண்டியது, துளியேனும் மாறுமலும் தயங்காமலும் கருணையை அவ்வப்போது புரியும் மகேசனின் செயலேயே அல்லவா? தோன்றுகின்ற புயல்கள் யாவும் ஒரு நொடியில் அமைதியடையுமாறு செய்யும் அக்கருணாமூர்த்தியின் கழலிணைகள் இந்தப் பிரபஞ்சத்தில் என்றென்றும் வாழட்டும்! அனைவரும் கலி தீர்ந்து களிப்போடு வாழுமாறு அச்சுந்தரப் பெருமானின் மலரடியைச் சிந்திப்போம்.

* * * *

## முடிவுரை

நம் பாரத தேசத்தின் பண்பாடுகள்யாவும் நூடலை. தமிழ் மொழியிலும் இன்னும் ஆரியம் போன்ற மொழிகளிலும் இயற்றப்பட்டுள்ள புராண காவிய இலக்கியங்கள் எல்லாம் சாகாவரம்பெற்ற சிந்தாமணிகள். அவைகள் வேண்டியவர்களுக்கு வேண்டியவற்றை யெல்லாம் அளிக்க வல்லவை என்பது தெளிவு. தேசத்தின் பண்பாடுகள் முத்திரை போலப் பதியப் பெற்ற பொக்கிஷங்கள் தாம் அவ்விலக்கியங்கள்.

திருவிளையாடற் புராணமும் உலகையொட்டிய இறைவனது லீலைகளையே கூறுகின்றது என்பதை நாமறிவோம். அதை ஆரியத்தில் படித்தாலும், தமிழில் படித்தாலும் ஒன்றே! செய்யுளில் கண்டாலும் வசனத்தில் பார்த்தாலும் ஒன்றே! உண்மையான பொருளை உணர்வதே நம் கடமை. உணர்ந்த உறுதிப் பொருள்களைக் கடைப்பிடித்தொழுகுவது அடுத்தாற்போன்ற கடமை.

மனிதன் தன் கடமையைத் தானே அறிந்து ஒழுகுவதற்கு இம்மாதிரி இலக்கியங்கள் தக்க தூண்டுகோல்களாகும் என்பது அறிஞர் துணிவு.

தமிழன் தமிழனையே பெரிதும் விரும்பவேண்டும். தமிழின்பமே அவனுக்குத் தேவாமுதம். அத

னுள் இணைப்பதே அவனுக்குச் சாம்ராஜ்ய சுகங்கள்.

பரஞ்சோதிமுனிவர் பக்தியும் தமிழின்பமும் சேர 3363 செய்யுட்களுக்குமேல் பாடியருளிய பெருமையைத்தமிழர் மறக்க முடியாது. தமிழ் மக்களுடைய நன்றி அவர்க்கு என்றென்றும் உரியதாகும்.

திருவிளையாடல் படிப்போருக்குத் தூய நெறியைக்காட்டி, நற்பாக்கியங்களைக் கூட்டுமென்று முனிவர் முதன் முதலாகக் கூறியுள்ளார். அது முக்காலும் உண்மையென்று அனைவராலும் மறுக்கப்படாத விஷயமாகும்.

அனைவரும் நல்வாழ்வு பெற்றுத் தூய ஜோதியைப் பிரகாசிக்கும் வண்ணம் இந்நூல் செய்யும் என்பது மகிழ்ச்சியுடன் வரவேற்க வேண்டிய பாக்கியமேயன்றோ?

மல்குக வேதவேள்வி:
வழங்குக சுரந்து வானம்;
பல்குக வளங்க ளெங்கும்;
பரவுக அறங்கள்; இன்பம்
நல்குக உயிர்கட்கெல்லாம்;
நான் மறைச் சைவ மோங்கிப்
புல்குக உலக மெல்லாம்;
பூவலன் செங்கோல் வாழ்க.

முற்றிற்று

# மவுண்ட்பாட்டன் புறப்பட்டபோது



இந்தியாவிற்குப் புதிய வைஸ்ராயாக நியமிக்கப்பட்டு,வந்துசேர்ந்திருக்கும் மவுண்ட்பாட்டன் பிரபு லண்டனைவிட்டுப் புறப்படுமுன்பாக, லண்டன் இந்தியா ஹவுஸில், இந்தியாவின் ஹை கமிஷனர் ஸர் ஸாமுவேல் ரங்கநாதன் அவருக்கு ஓர் உபசாரம் நடத்தினர். மவுண்ட்பாட்டன் அவ்விருந்தில் தட்டிலிருந்து ஒரு பணியாரத்தை எடுத்துக்கொண்டார்.









(மேல்)

ஆஸ்திரேலியாவில் இந்திய ஹைகமிஷனராயுள்ள ஸர் ரகுநாத பராஞ்சபையும், அவரது பெண் ஸ்ரீமதி சகுந்தலா பராஞ்சபையும் புதிய ஆஸ்திரேலிய கவர்னர் ஜெனரல் பிரமாணம் எடுத்துக் கொள்ளும் வைபவத்திற்காகப் பார்லிமெண்டு சென்றபோது எடுத்தபடம்.

—டபிள்யூ. பி. என். எஸ்.

(மேல் இடது)

வைஸ்ராய் மவுண்ட்பாட்டனும் அவரது மனைவியும் தங்கள் குமாரி பாமேளாவுடன் விமானத்தில் இந்தியாவுக்குப் புறப்பட்டனர். வைஸ்ராய் தம்பதி விமானத்தில் புறப்படச்செல்லும்போது எடுத்த படம்.

—டபிள்யூ. பி. என். எஸ்.

(இடது)

புதிய வைஸ்ராய் ஐ. யி மவுண்ட்பாட்டன் பிரபு தமது பிரதம ராணுவ ஆலோசனையாளராக நியமித்துக்கொண்டிருக்கும் ஜெனரல் இஸ்மே பிரபு.



அன்புள்ள அம்மாவுக்கு,
அலமு அநேக தண்டம்
சமர்ப்பிவித்த விஞ்ஞாபனம்.

50

மந்திரிசபை மாற்றி அமைக்கப்பட்டாலும் பட்டது, 'இவ'ருக்கும் வாஸுவுக்கும் ஓய்ச்சலொழிவில்லை. வீட்டில் ஒரு நிமிஷம் தங்குவதற்கு பிடிக்கவில்லை. ராத்திரி, பகல், என்று பாராமல் 'கார்மேல் கார்' வந்தபடிதான். வெளியே போனபடிதான். எவ்வளவோ தகராறுகள். எத்தனையோ பேரை ஸமாதானம் செய்ய வேண்டியிருக்கிறது, 'பதவியுமாயிற்று, பாக்யமுமாயிற்று. ஒரு வம்புக்கும் போகாமல் கிருஷ்ணா, ராமா என்று வீட்டில் உட்கார்ந்திருப்பதற்கு மிஞ்சிதான் மற்ற எல்லாம்' என்று மாமனார் சொல்கிறார். 'இதெல்லாம்' 'ரிடயர்' ஆன பிறகு ஏற்படும் வேதாந்தம் ஸார். யௌவனத்தில் அப்படியெல்லாம் தோன்றுமா? ஒரு 'ஆட்டு ஆட்டித்தான்' பார்க்கத் தோன்றும். அப்பொழுதுதான் மனதை ஒரு 'பாட்டிலே' போடும். நீங்கள் பாரஸ்டு ரேஞ்சர் வேலை பார்த்தபோது என்ன அலைச்சல் அலைந்தீர்கள்? இப்பொழுது அதை மனதால் நினைத்தாலே நடுங்குகிறது உங்களுக்கு. அதிலும் பதவிஎன்றால் லேசில்கிடைத்துவிடுமா? ஒரு பக்கத்தில் ஒரு கோஷ்டி கல்லை விட்டு எறிந்து கொண்டே இருக்கும்; மற்றொரு பக்கத்தில் ஒரு கோஷ்டி தங்க பிரேம் போட்டவரவேற்புப் பத்திரத்தையும் ரோஜா மாலையையும் கையில் வைத்துக் காத்துக் கொண்டிருக்கும்! நாலுபேருக்கு 'மனிதனாக' இருக்க வேண்டுமென்றால் எல்லாவற்றிற்கும் தயாராகத் நான் இருக்க வேண்டும். ஆகவே பேசாமலிருங்கள். கிட்டுவுக்கு ரொம்ப நல்ல காலம் வந்திருக்கிறது. சீக்கிரத்தில் மந்திரி வேலையே ஆனாலும் ஆகும் என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஏன்? என்ன யோசிக்கிறீர்கள்? யாராருக்கோ ஆகும்போது கிட்டுவுக்கு ஆவதற்கு என்ன ஆட்சேபனை ஸார்! நல்ல படிப்பு, குணம், திறமை எல்லாம் இருக்கிறது. இவ்வளவு தேறினால் போறாதா? பார்க்குக்கு வருகிறீர்களோ இல்லையோ? இன்று வெயில் ரொம்ப கடுமை ஸார்!' என்று சொல்லிவிட்டு பக்கத்தகத்து கணக்குவாத்தியார் மாமனாரை பார்க்குக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டார்.

'இவரும்' எங்கோ வெளியே போயிருந்தார். நான், மாமியார், நாத்தனார், மன்னி எல்லோரும் தெருப்பக்கம் தாழ்வாரத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். ஆமாம், மந்திரியின் மனைவி என்றால் இப்படியெல்லாம் கட்டுப் பெட்டியாக இருந்தால் சரிப்படாது அலமு! எத்தனையோ பொதுக்கூட்டங்கள், விருந்துகள், பரிசளிப்புகள், ஓய்ச்சலொழிவு இருக்காது. அதற்கெல்லாம் தகுந்த மாதிரி பழகத் தெரிந்து கொள்ள வேண்டும், என்று மன்னி 'கிண்டல்' பண்ண ஆரம்பித்து விட்டாள். ஆனால் உள்ளூர அவளுக்கிருக்கும் சந்தோஷத்தைச் சொல்லியே முடியாது. கள்ளங்கபடமில்லாத மனஸுபாவம்!

அந்த சமயத்தில் சௌந்தரம் ஒரு ரிக்ஷாவிலிருந்து இறங்கி குடு குடுவென்று அங்கே ஓடி வந்தாள். 'ஒரு விசேஷம் தெரியுமோ?' என்று சந்தோஷம் தாங்க மாட்டாமல் ஹிருதயமே வெடித்து விடும் போல் கேட்டாள்.

சரி, இன்னும் ஏதோ ஒன்றிரண்டு மந்திரிகள் சேர்க்கப் படப்போவதாகச் சொன்னார்களே. 'இவரு'க்குத்தான் மந்திரி வேலை ஆகிவிட்டது போலிருக்கிறது. சிரோமணி வந்து சொல்லியிருக்கும். அதைக்கேட்டுக்கொண்டு சந்தோஷம் தாங்கமாட்டாமல் ஓடி வந்திருக்கிறது என்று தீர்மானித்துவிட்டோம். ஆகவே மன்னி கொஞ்சமும் யோசியாமல் 'எல்லாம் உனக்கு முன்னாலேயேதெரியும். மந்திரிவேலை தானே?' என்றாள். 'மந்திரி வேலையா? என்னஅது? எனக்கொன்றும்தெரியாதே' என்றது சௌந்தரம். மன்னி ஏமாற்றம் அடைந்தவளாய், 'வேறு என்னவாம்' என்றாள். 'இதோபாருங்கள்' என்று சௌந்தரம் ஒரு 'செக்'கை எடுத்துக் காண்பித்தது; அதில் ரூ. 1000 என்று கண்டிருந்தது. 'இது ஏது? உன் அகமுடையானுக்கு யாரோ கொடுத்திருக்கிறார்கள்' என்றாள் மன்னி.

ஆமாம். கமனி பிக்சர்ஸார் 'அவருக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு ஸினிமாப்படம் பிடிக்கப் போகிறார்களாம். அதில் 'அவர்' (சிரோ



மணி) சாணக்யராக நடிக்கப் போகிறாராம். மொத்தம் 5000 ரூபாய் கொடுப்பதாக உடன்படிக்கையாம். இந்த ஆயிரம் ரூபாயும் அட்வான்ஸாம்' என்றது சௌந்தரம். அதற்கு சந்தோஷம், வார்த்தையே சரியாகச் சொல்லமுடியவில்லை. 'நிஜமாகவா? அதனுடைய புத்தியே புத்தியடியம்மா! இப்படி எதிலுமா ஒரு பிரவேசம் இருக்கும்?' என்று மாமியார் ஆனந்த பாஷ்யம் சொரிந்தார். 'அது மகா கிண்டாயிற்றே. பணம் பண்ணுவதற்கான உபாயம் அதைப்போல் வேறு யாருக்குமே தெரியாதே,' என்று ஒப்புக்குத்தானோ, நிஜமாகத்தானோ பெரிய நாத்தனார் அதை ஆமோதித்த பாவனையில் பதில் சொன்னார். 'சரிதான். சினிமாவுக்கு க்யூவில் நின்று டிக்கெட் வாங்கும் விசாரம் விட்டது,' என்றேன் நான்.

மன்னிமாத்திரம் சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் மௌனமாய் இருந்துவிட்டு, 'ஆமாம், உண்மையாகவே இதில் உனக்குச் சந்தோஷந் தானா?' என்று சௌந்தரத்தை நோக்கிக் கேட்டாள். 'ஏன் எதற்காக அப்படிக் கேட்கிறீர்கள் மாமி?' என்றது சௌந்தரம். 'இல்லை. நிஜமாகவே நீ இதைப்பற்றிச் சந்தோஷப்படுவதானால்ரொம்பவும்முட்டாள்தனம் என்றுதான் சொல்வேன். நீங்கள் என்ன நினைத்துக் கொண்டாலும் சரி இதை விடவேறு பொருத்தமான வார்த்தை எனக்கு உபயோகப் படுத்தத் தெரியவில்லை,' என்றாள் மன்னி. 'ஏன், என்னவாம்?' என்றார் மாமியார்— தன் பெண்ணினுடைய அதிர்ஷ்டத்தைக்கண்டு பிறர் பொறுமைப்பட்டு விடுகிற மாதிரி.

'காலம் முன்போலில்லை. ரொம்பக் கெட்டுக் கிடக்கிறது மாமி. ரொம்ப ரொம்ப நல்லவர்களாகயிருந்தவர்களெல்லாம் சினிமாவில் சேர்ந்து ரொம்ப ரொம்ப கெட்டுப் போய்விட்டிருக்கிறார்கள். எத்தனையோ பேர்கள் தகாத குற்றமெல்லாம் செய்துபெருங் கஷ்டத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இதனால் எத்தனைக் குடும்பங்கள் அநியாயமாய்க் கெட்டுவிட்டிருக்கிறது. அது குடிப்பழக்கம் மாதிரி. கெடுவதற்கு அதில் எவ்வளவோ 'வசதிகள்' இருக்கின்றனவாம். பாவம்! சிரோமணி கௌரவமாய் ஏதோ காலத்தைக் கழித்துக்கொண்டு வந்திருக்கிறது. இதனால் நான் சினிமாக் கலையை தூஷிப்பதாய் நினைத்துவிடாதீர்கள். கலை உயர்ந்த கலைதான். ஆனால் அதில் சேர்ந்துள்ளவர்களில் சிலரின் லீலா விநோதங்களைப்பற்றி அம்பலப் படுத்தும் இந்தப் பத்திரிகைகள் கொடுக்கும் தகவல்களைப் பார்த்தால்தான் ஒரே பயமாயிருக்கிறது. எங்கள் அப்பா சொல்வார்: 'பணத்தைக் கண்டுவிட்டவன் பாயில் படுக்க மாட்டான் என்று. மேன் மேலும் அதை எந்த வழியிலாவது சேர்த்து விட வேண்டுமென்ற எண்ணம்தான் தோன்றுமாம். அதேமாதிரி இந்தச் சிரோ

மணி கொஞ்சம் பணத்தைக் கண்டுவிட்டது. இனி அதைச் சும்மா இருக்க விடுமா?' என்று மன்னி மாமியாரிடம் சொல்லி விட்டு, சௌந்தரத்தை நோக்கி, 'சௌந்தரம்! 'இளங்கன்று பயமறியாது' என்று சொல்வார்கள். அதே மாதிரி உனக்கு இன்னும் உலக அனுபவம் தெரியவில்லை. பணம் பண்ணிவிடுவது பெரிசல்ல. அதைக் கௌரவமான வழியில் சம்பாதிப்பதுதான் புத்திசாலித்தனம். வர வர சினிமாவில் சேர்ந்து நடிப்பதென்பது ஜனங்களிடையே ஸர்வஸாதாரணமாய்ப் போய் விட்டது. எங்கள் ஊரில் எங்கள் பக்கத்தகத்தில் சீமா என்று ஒரு பிள்ளை இப்படித்தான் நிறையப்பணம் கொடுக்கிறார்களென்று ஒரு படக் கம்பெனியில் போய்ச் சேர்ந்தது. முதலில் ரொம்ப பேர் வேண்டாமென்று சொன்னார்கள். கேட்கவில்லை. போய்ச் சேர்ந்




"......அந்த சமயத்தில் சௌந்தரம் ஒரு ரிக்ஷாவிலிருந்து இறங்கி குடுகுடுவென்று அங்கே ஓடிவந்தாள் ஒரு விசேஷம் தெரியுமோ? என்று......"


"......வாஸுவும் 'இவரும்' இன்னும்கூட இரண்டு மூன்று கதர் குல்லாக்காரர்களும் வருகிருர்கள்......"

தது. நல்ல பேர்தான் எடுத்தது. நிறையப் பணமும் வந்தது. என்ன பிரயோஜனம்? நடத்தை ரொம்ப மோசமாய்ப் போய்க் கடைசியில் அங்கே ஒரு பெண்ணுக்கு ஆயுள்பரியந்தம் ஜீவனும்சம் கொடுக்கும்படியாய் விட்டது. வெளியிலே வம்பளப்பு காது கொண்டு கேட்க முடியவில்லை. அதனுடைய சொந்த மனைவி பாவம் அழுது அழுது மாளவில்லை அதற்கு. போர்வழி விட்டு வழி திரும்பினுல்தானே! போய்ச் சேருகிறவன் பரம யோக்யனுக இருந்தால்கூட ரொம்ப ஜாக்கிரதையாக இருந்தால்தான் போயிற்று. கொஞ்சம் மனதை விட்டானே குடி கெட்டுதோ! சிறிசுகள்தானேடியம்மா!' என்ருள் மன்னி.

இவ்வளவையும் செளந்தரத்துக்கு முகம் ரொம்ப சின்னதாகப் போய்விட்டது. மன்னி ரொம்ப தீர்க்க திருஷ்டியுடன்தான் பேசுவாள் என்பது அதற்கு நன்ருகத் தெரியும். இருந்தாலும் அது சொல்லிற்று: 'நேற்று ராத்திரி மணி பதினென்றிருக்கும். தெருவில் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து இவரும் இன்னெருவரும் இறங்கி வீட்டினுள் வந்தார்கள். ரொம்ப நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு, கூட வந்தவர் போய் விட்டார். இவர் என்னைக் கூப்பிட்டுச் சொன்னர். "அதிர்ஷ்டம்நம்மை சாதாரணமாக விடாது போலிருக்கிறது. அன்று அந்த ஜோஸ்யர் சொன்ன மாதிரி ஒரு 'ல' காரத்தை (லக்ஷம். ரூபாய்)க்கொடுத்து விட்டுத்தான் மறு வேலை பார்க்கும் போலிருக்கிறது! இதோ பாரேன். நான் ஸ்வப்னத்தில் கூட நினைக்கவில்லை. சாணக்யனுக நடித்துத்தான் ஆகவேண்டுமென்று பிராணனை வாங்குகிருன். வேறு யாரை யாவது பார்த்துக் கொள்ளுங்கள் என்ருல் கேட்கமாட்டேனென்கிருன். அந்த வேஷம் என்னைத்தவிர வேறு யாருக்கும் அவ்வளவு பொருத்தமாக இருக்குமென்று தோன்றவில்லையாம். 'செக்'கை கிழித்துக் கொடுத்து விட்டுப் போயே போய் விட்டான். ஆனுல் போர்வழி கொழுத்த பணக்காரன். பணத்தைப் பற்றி விசாரமில்லை. என்னமோ வலிய வருவதை உதைத்துத் தள்ளுவானேன் என்று ஒப்புக்கொண்டு விட்டேன்,'' என்ருர். என்னமோ இந்த நாளில் எல்லோரும் தான் சினிமாவில் சேர்ந்து நடிக்கிருர்கள். நாம் நடிக்காமல் இருந்து விட்டதால் மாத்திரம் உலகம் திருந்திவிடப் போகிறதா! என்ன? எதுவாவது இருக்கட்டும். பணத்திற்கு வழியுண்டா? இன்றையப் பிரச்னை அது தானே?' என்று.

மன்னி அதற்குமேல் ஒன்றும் சொல்லவில்லை. 'சரி! நல்லது ஏற்பட்டால் எல்லோருக்கும் சந்தோஷந்தான்' என்று பதில் சொல்லி முடித்துக் கொண்டாள், மாமியாரின் சந்தோஷத்தைச் சொல்லியே முடியாது,

அதோ தெருவில் கார் வந்து விட்டது. வாஸுவும் 'இவரும்' இன்னும் கூட இரண்டு மூன்று கதர் குல்லாக்காரர்களும் வருகிருர்கள். மற்றவை அடுத்த கடிதத்தில்.

இப்படிக்கு,

உன் அன்புள்ள, அலமு.






சென்ற வாரம் பிரதம மந்திரி ஸ்ரீமான் ஓமந்தூர் ராமஸ்வாமி ரெட்டியார் பூண்டி நீர் தேக்க ஆராய்ச்சி கூடத்துக்கு இதர மந்திரிகளுடன் போய் பார்வையிட்டார். என்ஜினீயர் சொன்ன அபிப்ராயத்துக்கு ஹாஸ்யமாகப் பதில் சொல்லி ஆனந்தப்படுகிருர். பக்கத்தில் தோன்றுவது அணைக்கட்டின் தோற்றம்.


கும்பகோணம் கமலா நேரு வாசகசாலையின் வருட ஆண்டுவிழா பூர்த்தியாகி புது வருட உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட பின் நடந்த உபசரிப்பின்போது எடுத்த படம்.



# 'ஜீப்'பாவளி!

நீலம்

[யுத்தகால சாதனமாக விளங்கிய "ஜீப்", சமாதானகாலத்தில் சந்து, பொந்துகளிலெல்லாம் சாரி சாரியாகப் பறந்து செல்வது கண்டு திகைக்கும் நாட்டுப்புற நபர் தன் அண்ணனிடம் கீழ்க்கண்டவாறு அபிப்ராயம் சொல்கிறார்.]

1. அறுத்து விட்ட கழுதை போலே
எடுக்குதண்ணே ஓட்டம்!
குலுக்கும் நெடுக்கும் விழுந்தடிச்சு
பறக்குதண்ணே 'ஜீப்'பு!

2. மோட்டு வளையை பாத்துகிட்டே
ஓட்டுறாங்க அண்ணே!
ஆட்டம் கண்டு உடலை எல்லாம்
சொடுக்குதண்ணே 'ஜீப்'பு!

3. எதிரே வர்ர ஆளையெல்லாம்
எறும்பு போலே எண்ணி
பதறிப் பாயச் செய்யுதண்ணே!
பாவிப்பய 'ஜீப்'பு!




4. 'பாசன்' என்று ஆசைப்பட்டு
காசைப் போட்டு வாங்கி
பாசக் கயிறை வீசுறாங்க
மோசம் படு மோசம்!

5. கட்டை வண்டி மட்டமின்னு
கேட்டம் பல சொன்ன
தேட்டையான மோட்டாருன்னு
ஓட்டுறாங்க 'ஜீப்'பை!

6. மாடு, மனை, வீட்டை எல்லாம்
அதிரடிக்கும் ஓசை
ஆடு, கோழி, வாத்தை எல்லாம்
சிதறடிக்கும் 'ஜீப்'பு!




7. எத்தனையோ வண்டியெல்லாம்
பாத்து விட்டோம் அண்ணே!
இதைப் போல பித்த வெறி
கொண்ட வண்டி இல்லை!

8. சந்துரங்க உள்ளுக்குள்ளே
துணிஞ்சு அடிச்சு விழுந்து!
இந்த விதத் தொந்திரவை
எங்கும் கண்டதில்லை!




9. ஆப்பம் சுடும் ரோட்டுக் கடை
ஆச்சி போட்ட கூச்சல்
பேப்பருல்லே போட்டு நல்லா
காச்சுறாங்க 'ஜீப்'பை!

10. எருமை மேலே ஏறி வரும்
எம ராசாவைப் போல
பெருமையென்று நினைச்சுகிட்டு
ஓட்டலாமா 'ஜீப்'பை?

11. வாட்டமுள்ள பேர்களெல்லாம்
கூட்டமொன்று போட்டு
காட்டுப் பக்கம் ஓட்டிடலாம்
நாட்டிலுள்ள 'ஜீப்'பை!





ரயில்வே போர்டு என்ஜினீயரிங் மெம்பர் டாக்டர் நிக்கல்ஸ் (இடது புறத்தில் இரண்டாவது) பண்டித நேருவுக்கும், ஸர்தார் பலதேவ்ஸிங்குக்கும் புதிய ரயில் வண்டியின் அமைப்பு விசேஷங்களை விளக்குகிறார். ரயில்வே இலாகா மந்திரி டாக்டர் ஜான் மத்தாயும் (எதிர் வரிசையில் 'ஸிகார்' வைத்திருப்பவர்) பிரசன்னமாயிருந்தார்.

யுத்தம் தீர்ந்த பின்னர் புதிய அபிவிருத்திகளோடு சிருஷ்டிக்கப்பட்ட முதல் ரயில் வண்டிக்கு "ஸில்வர் ஆரோ" என்ற பெயர் கொடுத்திருக்கிறார்கள். பிரயாணத்தை வசதிகரமாகவும், அத்தோடு துரிதமாகவும் நடத்துவதற்கு ஏற்ற வண்ணம் இவ்வண்டி அமைக்கப்பட்டுளது. முன்பெல்லாம் இருந்த வண்டியின் பளுவைவிட இவ்வண்டி 65 சத விகிதம் எடை குறைவு. இடமும் விஸ்தரிக்கப்பட்டுளது. வண்டியின் உள் அளவு 11 அடி 8 அங்குல அகலம், 70 அடி நீளம்; இந்த வண்டி முழுதும் அலுமினியம் பூசப்பட்டு வெள்ளியில் செய்யப்பட்டதுபோன்று ஜொலிக்கிறது.

மூன்றாவது வகுப்பு வண்டியின் உள்புறத் தோற்றத்தைக் காட்டும் படத்தை எதிரே பார்க்கலாம். உட்காரும் இடங்கள் பெரிதாக்கப்பட்டு லேசாக ஒரு மெத்தை தைக்கப்பட்டிருக்கிறது. [illegible] வசதி ஒவ்வொரு வண்டியிலும் உண்டு. முகம் பார்க்கும் கண்ணாடியோடுகூடிய கக்கூஸ் வசதி செய்யப்பட்டிருக்கிறது. படுக்க வசதியும், காற்று வசதியும் ஒன்றுகூடிய இவ்வண்டியில் ஏறுவதற்கும், இறங்குவதற்கும் பொருத்தமாக பெரிய வழியும், கதவுகளும் உண்டு.



# குழந்தைக் கலை

ஆர். லக்ஷ்மி அம்மாள்

## குழந்தை யுகம்

“கலியுகம் அல்லவா? இப்படித் தான் இருக்கும்!” என்று முணுமுணுத்தார், பாயில் புரண்டுகொண்டே கலிபுருஷ தாஸர். அவரை நோக்கி, “சற்றே எழுந்து உட்காரும், பிள்ளாய்! கண்ணைத் துடைத்துக்கொள்ளும், கொட்டாவி வருகிறதா? நிமிர்ந்து உட்காரும். ‘இப்போது துவாபரயுகம் பிறந்துவிட்டது உமக்கு!’ என்றார் பாரத தாஸர். பாயைச் சுருட்டிப் போட்டுவிட்டு, மார்பு நிமிர உட்கார்ந்திருந்தவரை நோக்கி நவ பாரத தாஸர் சொன்னார்:— “எழுந்து நில்லும்; நிமிர்ந்து நில்லும்; முகத்தையும், மார்பையும் நேர் கோட்டில் வைத்துக்கொண்டு நில்லும், கம்பீரமாக. உமக்குத் திரேதாயுகம் வந்துவிட்டது, வந்துவிட்டது!” என்றார். அப்படி நின்றவரைப்பார்த்து, “அதோ அந்தக் கோடு நோக்கி நடந்து செல்லும். அப்படிச் சோர்ந்த நடை அல்ல; கம்பீரச் சிங்க நடை, மிடுக்கான புருஷ நடை. ஆம், அப்படியே நடந்து அந்த எல்லைக் கோட்டில் போய் நில்லும். இப்படி லட்சியத்தை நோக்கி நடந்தீரானால், நீர் கிருதயுக புருஷராவீர்! கலியுகமே! விலகி விரைந்து ஓடிப் போ; கிருதயுகமே! ஓடி வந்து விடு” என்று கூவினார் புதுயுகச் சிற்பி.

## ‘குழந்தை ராஜ்யம்’

உண்மையில், காங்கிரஸும் காந்தியும் ஒரு புதிய சுதந்திர யுகத்தை நம் நாட்டிலே நிலைநாட்ட அரும்பாடு பட்டுப் பெரு வெற்றியும் கண்டிருக்கிறார்கள். இச்சுதந்திர கிருத யுகத்தை ஒருவாறு குழந்தை யுகமாகவும்செய்துகொள்வோமானால், சுதந்திரமும் நிலைபெறும்; ஒரு புத்தப்புதிய இந்தியாவும் பிறந்து விடும். ஏழைப் பொது மக்களுக்கு நீதி வேண்டி, நலம் வேண்டி, பலம்வேண்டி நாம் சுயராஜ்யப் போர் தொடுத்தோம். எடுப்பார் கைக்குழந்தைகளாக இருக்கும் கிராம மக்களுக்குக் ‘கிராம ராஜ்யம்’ வேண்டினோம்; ராம ராஜ்யம் வேண்டினோம். எனினும் காந்தியடிகள் நம் அகக்கண்முன் காட்டும் ராம ராஜ்யத்தின் ஒரு முக்கியமான பகுதி ‘குழந்தை ராஜ்யம்’தான் என்பதை நம்மில் பலரும் நினைத்துப் பார்ப்பதில்லை.

